RESEARCH ARTICLE

DOI: 10.54392 /ijot2143

INDIAN JOURNAL OF TAMIL

# செவ்வியல் இலக்கியங்களில் உயர் பண்புகள்

**மு. மஞ்சுளா** [அ,*]

[அ] தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு-603203, தமிழ்நாடு, இந்தியா

# High Characteristics of Classical Literature

**M. Manjula** [a,*]

[a] Department of Tamil, SRM Collee of Arts and Science, Kattankulathur, Chengalpattu-603203, Tamil Nadu, India.
*Corresponding author Email: manjulasrmtamil@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2143
Received: 27-09-2021; Revised: 19-10-2021; Accepted: 21-11-2021 Published: 25-11-2021

**Abstract:** Classical literature helps us to understand the ancient Tamil society. The ancient Tamil community was a society that followed high characteristics. Classical literature shows that when people follow high qualities in a society where they live together, it leads to equality, development and unity of society. The so-called characteristic sing-and-run step emphasizes the idea that the world should know the state of the world and adapt to it. The uniqueness of Tamils is due to the high qualities they followed. Classical literature also highlights the need to possess the highest qualities from the individual to the king. The purpose of this article is to examine the high qualities mentioned in classical literature such as Sangam literature and Thirukkural.

**Keywords:** Classical literature, Ancient Tamil, Thirukkural, high characteristics

## முன்னுரை

பண்டையக் கால தமிழ்ச் சமூகம் உயர் பண்புகளை பின்பற்றிய சமூகமாக விளங்குகின்றன. மக்கள் ஒன்று கூடி வாழும் சமுதாயத்தில் உயர் பண்புகளை பின்பற்றி வாழும் பொழுது அது சமூகத்தின் சமத்துவத்திற்கும், வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் வழிவகுத்து இருப்பதை செவ்வியல் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. “பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்” என்ற அடியானது உலக நிலையை அறிந்து அதற்கு ஏற்பஒழுகவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது (Puliyur Kesikan, 2010a). செவ்வியல் இலக்கியங்களாகத்திகழும் சங்க இலக்கியத்திலும், திருக்குறளிலும் எடுத்துரைக்கப்பட்ட உயர் பண்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அரசனுக்குரிய உயர் பண்புகள்

ஆளும் அரசன் மக்களுக்கான முன்னோடி ஆவான் அதனால் தான் “அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே “என்றனர். எனவே அரசன் தனக்கான பொறுப்பை மிகச் சரியாக உணர்ந்து கடமையாற்ற வேண்டும். ஆளும் அரசனுக்கு நான்கு முக்கிய பண்புகள் எப்பொழுதும் இருக்க வேண்டும் அவை அஞ்சாமை என்று சொல்லப்படும் திண்மை, இருப்பதை பலருடனும் பகிர்ந்து உண்ணும் ஈகை குணம் பின்னால் நடக்க இருப்பதை முன்கூட்டியே கணித்து அதற்கேற்ப திட்டமிடும் அறிவுடைமை, ஆற்றவேண்டிய வினைகளை நன்கறிந்து ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பங்காற்றும் ஊக்கமுடைமை ஆகியனவாகும். இதனை,

“அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்ற அடிகள் உணர்த்துகின்றன (Varadarajan, 2014). இந்நான்கு பண்புகளும் மக்களிடமும் இருக்கும்பொழுது சமத்துவ சமூகம் உருவாகவும், உயர்விற்கும் வழி காண்பதாக அமைகின்றன. ஒன்றைச் செய்ய முடிவெடுத்து அப்பணியில் இறங்கிய பிறகு நம்மால் முடியுமா? என்ற ஐயம் கொண்டு பின் வாங்குதல் கூடாது முதலிலேயே செம்மையாக எதனையும் செய்ய வேண்டும். அறவழியில் நடப்போரை அறிந்து கொள்ள வேண்டும். புறங்கூறும் மனிதர்களின் சொல்லைக் கேட்கக் கூடாது. தீஞ்செயல் புரிந்தவருக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும். தவறு செய்தவர் மனம் திருந்தி பணிந்தால் அவருக்கான தண்டனையைக் குறைத்தும் அவரிடம் அன்பு பாராட்டவும் வேண்டும். இவையாவும் ஆளும் அரசனுக்கான உயர் பண்புகளாகும். இத்தகு பண்புகளை சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி பெற்றிருந்ததாக ஊன்பொதி பசுங்குடையார் அவனைப் போற்றியுள்ளார். இதனை

"வழிபடு வோரை வல்லறி தீயே

பிறர் பழி கூறுவோர் பொழிதே றலையே"

என்ற அடிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது (Puliyur Kesikan, 2010b).

தமக்குரியர் தவறு செய்திருப்பின் பொறுத்தலும், இரவலர்க்கு உதவ முடியாத நிலைக்கு நாணுதலும், பிறர்பழி கூறாத பேராற்றலும், மூவேந்தர் அவையில் தலை நிமிர்ந்து நடத்தலும் ஆகிய உயர் பண்புகளை ஏறைக்கோன் பெற்றிருந்ததாக குறமகள் இளவெயினியார் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை,

"தமர்தன் தப்பின் அதுநோன் றல்லும்

பிறர்கை யறவு தான்நா ணுதலும்"

என்ற அடிகள் உரைக்கின்றன (Puliyur Kesikan, 2010b).

ஆளும் அரசன் முன்னோர் வகுத்த நெறியில் நின்று ஆட்சி புரிய வேண்டும். ஆட்சிப் பணியை தொடர்வதற்கு நிதி வளம் மிக முக்கியமாகும். எனவே வருவாய் உயர்விற்கான வழியைக் கண்டறிந்து வருமானத்தை உருவாக்க வேண்டும்.

உருவாக்கிய வருவாயை சிதறாமல் ஒன்று சேர்க்க வேண்டும். சேர்த்த செல்வத்தை அழியாவண்ணம் பாதுகாக்க வேண்டும். பாதுகாத்த செல்வத்தை தேவைக்கு ஏற்ப முறையாக செலவு செய்யும் திறன் பெற்றவனாக ஆளும் அரசன் இருக்க வேண்டும் இதனை,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த

வகுத்தலும் வல்லது அரசு"

என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன (Varadarajan, 2014). நீதி வழுவாமல் குடிகளை காக்கும் அரசனை மக்கள் இறைவனுக்கு உரிய இடத்தில் வைத்து வணங்குவர். உலகின் நற்செயல் புரிபவர்களுக்கு உரிய மதிப்பு என்றும் உண்டு. இதை உணர்ந்து நடப்பவர் என்றும் நெறி தவறுவது இல்லை இதனை,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

என்ற அடிகள் மூலம் அறியமுடிகின்றது (Varadarajan, 2014).

உலக அளவில் நற்செயல் புரிபவர்களை மதிப்பிடும் போக்கு ஒன்றாகவே இருந்திருப்பதை காணமுடிகிறது. இதனை

"குணத்திலோ செயலிலோ ஒருவன் மேம்பட்டு நிற்பான் ஆகில் அவன் நிலையை இறைத் தன்மைக்கு உயர்த்துதல் உலக வழக்கு" என்ற கதிர் மகாதேவன் கூற்றும் உணர்த்துகின்றன (Kathir Mahadevan, 1985).

## தலைவனுக்குரிய உயர் பண்புகள்

இல்லறம் பேணுவதற்குரிய தேவையான பொருளீட்டும் செயல் ஆடவருக்கு உயிராகவும், மனையில் வாழும் மகளிர்க்கு ஆடவர் உயிராகவும் கருதி வாழ்ந்திருக்கின்றனர் இதனை.

"வினையே ஆடவர்க்கு உயிரே வாழ்முதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"

என்ற பாலைப் பாடிய பெருங்கடுங்கோவின் கூற்று பொருளீட்டுதலின் அவசியத்தையும் உயிர்ப்புள்ள பரிபூரண அன்பே வாழ்க்கையை செழுமையாக்கும் என எடுத்துரைக்கின்றன (Puliyur Kesikan, 2017).

முன்னோர் வைத்துச் சென்ற செல்வத்தை பயன்படுத்துவோர் செல்வம் உள்ளவராக கருதப்படமாட்டார்கள். தாம் உழைத்து ஈட்டாத செல்வத்தை இரத்தலைக் காட்டிலும் இழிவானது எனக் கருதினர். அறவழியில் உழைத்து பொருளை ஈட்டி இன்புற்று நுகர்தலை வாழ்வியல் முறையாகக் கொண்டிருந்தனர். இதனை,

"உள்ளத்து சிதைப்போர் உளர் எனப் படாஅர்

இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு"

என்ற பாலைப் பாடிய பெருங்கடுங்கோவின் கூற்று உணர்த்துகின்றன (Puliyur Kesikan, 2017).

## தலைவியின் உயர் பண்புகள்

தலைவனின் வருமானத்திற்குள் இல்லறத்தை சிறப்புற நடத்திச் செல்பவள் உயர் பண்புள்ள மனையாளாகவும், சிறந்த வாழ்க்கைத் துணையாகவும் மதிக்கப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. இதனை,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற குறளடிகள் எடுத்துரைக்கின்றன (Puliyur Kesikan, 2012).

தன் தந்தையின் இல்லத்தில் விளையாட்டுப் பெண்ணாக இருந்த மகள், மணவாழ்க்கையில் கணவனின் குடி வறுமையுற்ற பொழுது தந்தையின் வளமிக்க சோற்றை எண்ணாமல் ஓடுகின்ற நீரில் கலந்திருக்கும் நுண்மணல் போல் ஒரு பொழுதுவிட்டு ஒருபொழுது உண்ணும் வன்மையை எங்கிருந்து பெற்றனளோ? என்ற செவிலித்தாயின் கூற்று தலைவியின் உயர் பண்பினை எடுத்துரைப்பதாக அமைந்திருக்கின்றன. இதனை,

"ஒழுகுநீர் நுணங்கறல் போலப்"

என்ற போதனாரின் கூற்று விளக்குகின்றன (Puliyur Kesikan, 2012).

## தோழியின் உயர் பண்புகள்

உடன் போக்கிற்கு முன் தோழி தலைவனுக்கு அறிவுரை வழங்குகிறாள். பழையனின் தப்பாத வேற்படை சோழனின் வெற்றிக்கு உறுதுணை புரிவதைப் போல நீயும் தலைவிக்கு உற்ற துணையாக இருக்க வேண்டும். இன்றைக்கு இருக்கும் இவ்வழகிய தோற்றம் நாளை நிலை குலைந்தாலும் இவள் நமக்கு ஏற்றவள் அல்ல என எண்ணி அவளை விட்டு நீங்காது காப்பாயாக என்ற தோழியின் கூற்று அவளின் பாங்கினை காட்டுவதாக அமைகின்றது. இதனை,

"நீத்தல் ஓம்புமதி பூக் கேழ் ஊர"

என்ற அடி மூலம் அறிய முடிகின்றது (Puliyur Kesikan, 2012).

## முடிவுரை

மேற்கண்ட கருத்துக்களின் வாயிலாக ஆளும் அரசனுக்குரிய உயர் பண்புகளை தெளிவாக அறிய முடிகின்றது. தலைவனுக்கும் தலைவிக்கும் உயிராக இருப்பவற்றையும் தன் முயற்சியால் ஈட்டும் செல்வமே செல்வமாக கருதப்பட்டிருந்ததையும் அறிய முடிகிறது. கணவனின் வருமானத்திற்குள் குடும்பத்தை நடத்துவது பண்டைக்கால மரபு. எனவே அம்மரபைப் பின்பற்றியும், கணவனின் குடி வறுமையுற்ற பொழுது தலைவி பின்பற்றிய உயர் பண்பினையும் அறியமுடிகிறது. இளமை நிலையாமையை தலைவனுக்கு உணர்த்திய தோழியின் பாங்கினை அறியமுடிகிறது. இவ்வாறாக பழங்காலத் தமிழர்களின் உயர் பண்பினை செவ்வியல் இலக்கியங்களாகத் திகழும் சங்க இலக்கியமும், திருக்குறளும் திறம்பட எடுத்துரைத்தது தெளிவாகிறது.

## References


Mahadevan, Kathir., (1985) Oppilakkiya nokkil sanga kaalam, Macmillan India Limited, Chennai, India.

Puliyur Kesikan, (2010a) Kalithogai Thelivurai, Shri Senbaga Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2010b) Purananooru Thelivurai, Shri Senbaga Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2012) Natrinai Mutharpaguthi, Paari Nilayam, Chennai, India.

Puliyur Kesikan, (2017) Kurunthogai Thelivurai, Shri Senbaga Pathippagam, Chennai, India.

Varadarajan, Mu., (2014) Thirukkural Thelivurai, Paari Nilayam, Chennai, India.



### Acknowledgement

Nil

### Funding

This study was not funded by any grant


### Conflict of interest

The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.


### About the License

© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.



### Cite this Article

M. Manjula, High Characteristics of Classical Literature, Indian Journal of Tamil, 2(4) (2021) 17-20. https://doi.org/10.34256/ijot2143